24th February 1969]

போடுவதையும் 2,400 அடி நில வளவுக் கோடுகளுக்கு மேல் உள்ள நிலங்கள் மேலும் ஆக்கிரமிப்புக்கு உட்படாமல் பார்க்கவும், 2,400 அடிக்கு மேல் உயரத்தில் நிலம் வைத்திருப்பவர்கள் செய்ய வேண்டியதென்ன என்று அவற்றைக் கணக்கு எடுக்கவும் என்னென்ன நிலம் உள்ளது, பரப்பளவு. பயிரிடப்படும் பயிர் என்ன. என்ற விவரங்களை சேகரித்து அரசாங்கத்திற்கு தெரிவிக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஆக்கிரமிப்புகளையும், காடு வெட்டுப்படுதலையும் தடுக்க ஏற்பாடாகியிருக்கிறது. 4,000 அடி உயரத்திற்கு மேலுள்ள காட்டு நிலங்களில் பயிர் செய்யக் கூடாது என்று சொல்லப்பட்டது கோளாவுக்கு யானைகள் செல்வதைத் தடுக்கவும் முயற்சிகள் நடந்து வருகின்றன.

Jaundice in Thanjavur

* 30 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state--

(*a*) whether many persons were affected by jaundice in Thanjavur during May 1968;

(*b*) whether distribution of unfiltered water to the people caused the incidence of jaundice; and

(*c*) whether it is a fact that there was no Health Officer for a long time in that Municipality?

தஞ்சை நகரில் மஞ்சள் காமாலை வியாதி

திரு என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு சுகாதார அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1968 மே மாதத்தில் தஞ்சை நகரில் மஞ்சள் காமாலை வியாதி பலருக்கு ஏற்பட்டதா?

(இ) தண்ணீரை வடிகட்டாமல் பொது மக்களுக்கு வழங்கிய காரணத்தால் காமாலை வியாதி ஏற்பட்டதா?

(உ) நீண்ட நாட்களாக அந்த நகரசபையில் சுகாதார அதிகாரி இல்லாமலிருந்தார் எனக் கூறப்படுவது சரியா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) தஞ்சாவூர் நகராட்சியில் மே திங்களில் மஞ்சள் காமாலை நோய் ஆறு பேருக்கு மட்டுமே கண்டிருந்ததாக அறிவிக்கப்பட்டது.

(இ) இல்லை.

(உ) இது அவ்வளவு சரியல்ல. சுகாதார அதிகாரிகளாக நியமிக்கப்படுவதற்குத் தகுதியுள்ளவர்கள் கிடைக்காத காரணத்தால் 20-3-1967 பிற்பகல் முதல் 1-7-1968 முற்பகல் வரையில் நகராட்சி சுகாதார அதிகாரியின் பதவி காலியாக இருந்தது. 1-7-1968 பிற்பகல் முதல் அந்தப் பதவிக்கு நியமனம் செய்யப் பட்டது.

திரு என். வர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, தஞ்சாவூரில் நீண்ட நாட்களாகவே சுகாதார வேலைகள் சரியாக நடைபெற வில்லை என்பதற்கு ஆதாரமாக நேற்று முன் தினம் கூட

பத்திரிகையில் வந்த செய்தி இருக்கிறது எங்கோ ரசாயன உர கம்பெனியிலிருந்து வெளியேறுகிற கழிவுப் பொருள்கள் ஆற்றுத் தண்ணீரில் கலந்து அதைப் பயன்படுத்தியவர்களுக்கு நோய் உண்டாக்கியிருக்கிறது என்ற செய்தியை அமைச்சர் அவர்களும் படித்திருப்பார்கள். அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஏற்கனவே மே திங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுக்கப்பட்ட சிகிச்சை பற்றியும் மேலும் விரைவில் நோய் பரவாமல் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றித்தான் தகவல் இருக்கிறது. மேலும் மேலும் இதைப்போன்ற சுகாதாரக் கேடுகள் நடந்திருந்தால் அதைப் பரிசீலனை செய்து வேறு முறையில் அதுபற்றி பதில் அளிக்க தயாராக இருக்கிறேன்.

திரு ஜி. சுவாமிநாதன் : மஞ்சள்காமாலை நோய் ஆகஸ்டு மாதம் சென்னை மாநிலம் முழுவதும் பரவியிருந்தது என்பது உண்மை. அதை ஆங்கில மருந்துகளால் குணப்படுத்த முடியவில்லை என்றும் தமிழ் மருந்துகள் மூலம் அதாவது கையாந்தகரை என்ற இலைதான் சரியான மருந்து என்றும் சொல்கிறார்கள். அரசாங்கத்திற்கு அது தெரியுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : அதற்கான தகவல் இல்லை.

திரு. எம். எத்திராஜுலு: மஞ்சள்காமாலை வியாதி தமிழ்நாடு முழுவதும் பரவியிருக்கிறது. ஆங்கில மருந்துகள் மூலம் அதை சீக்கிரமாக குணப்படுத்தமுடியவில்லை என்று சொல்கிறார்கள் சித்த வைத்தியப்படி சீக்கிரம் குணப்படுத்த முடியும் என்பதோடு நாட்டில் கிடைக்கக்கூடிய மூலிகைகளைக் கொண்டு குணப்படுத்தலாம் என்ற நிலையிருக்கிறது. ஆகவே ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும் சித்தவைத்தியப் பிரிவு வைத்து இதுபோன்ற வியாதிகளைக் குணப்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : சித்த வைத்தியத்திற்கு அரசாங்கம் நல்ல வாய்ப்பு அளிக்கவேண்டுமென்ற முயற்சியில்தான் திருச்சி போன்ற நகரங்களில் அந்தப் பிரிவு வைக்கப்பட்டு நடைபெறுகிறது. குறிப்பிட்ட வியாதிக்கு சித்தவைத்திய சிகிச்சை குறித்து பரிசீலித்து அதன்பிறகுதான் சொல்லமுடியும்.

Physical Education Teachers of V. S. Boys' High School, Tiruvarur

* 31 *Q.*—THIRU G. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether notices of termination of services have been served on permanent Physical Education Teachers by the management of V. S. Boys' High School, Tiruvarur, Thanjavur district;